**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.29/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருணாகரன் | மதம் | : இந்து |
| த/பெ | : சஞ்சீவி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : நல்லாட்டூர் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**25.03.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. என் மனைவி எந்த தேதியில் இறந்தார் என்பதை எனது பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தேதி தெரியவில்லை. என் மனைவியின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து நான் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் ஆமாம். அந்த சொத்தில் என் மகன்களுக்கு உரிமையில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் அ.வ.எண்.88/2018ல் தியாகராஜன் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டும் என இடைமனு எண்.2/2019ஐ தாக்கல் செய்தபின்புதான் விவரம் தெரிந்ததாக சொல்கிறேன் என்றால் 2017ல் என் மனைவிக்கு புற்றுநோய் வந்தது. எனவே மொத்தம் 3 சொத்துக்களை ஆண்ட்ரூஸ்க்கு அடமானம் வைத்தேன். என் மனைவியை சென்னையில் சிகிச்சைக்கு சேர்த்து 1 மாதத்தில் அவர் இறந்துவிட்டார். என் மனைவி இறந்த ஒரு மாதம் கழித்து வந்த தியாகராஜன் திரும்பி வந்து ஏன் அழுது கொண்டே இருக்கிறாய் என்று கேட்டு தான் கடன் பெற வேண்டியிருப்பதாகவும் அதற்கு கேரண்ட்டி (Guarantee) கையெழுத்து போடவேண்டி வருமாறும் கேட்டார். என்னை திருத்தணி அழைத்து வந்து ஏதேதிலோ கையெழுத்து வாங்கினார். எனக்கு படிப்பறிவு இல்லாததால் நான் கையெழுத்து செய்தேன்.

2. என் மனைவி பெயர் என்ன என்றால் மல்லீஸ்வரி ஆகும். என் மனைவி இறந்து எத்தனை நாள் கழித்து நான் வீட்டைவிட்டு வெளியே வந்தேன் என்றால் இறந்து ஒரு மாதம் ஒரு மாதம் கழித்து நான் வீட்டை விட்டு சென்றுவிட்டேன்.

மீண்டும் வரவில்லை. என் அண்ணன் என் கையில் ரூ.5000 கொடுத்து எங்கையாவது போ. வீட்டில் இருந்தால் உன் மனைவி நியாபகமாக இருக்கும் என்று சொன்னார். எனவே நான் வீட்டை விட்டு சென்றுவிட்டேன். தியாகராஜன் ரூ.5000 கொடுத்தது பத்திரம் பதிவு செய்த அன்று என்றால் ஆமாம். நான் திரும்ப எப்போது வீட்டிற்கு வந்தேன் என்றால் என் மகன் புகார் கொடுத்து 10 நாட்கள் கழித்து வந்தேன்.

3. என்னிடம் காட்டப்படுவதுதான் என் மனைவியின் சமாதியின் புகைப்பட நகல் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் புகைப்பட நகல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 25.05.2015 ல் என் மனைவி இறந்ததாக நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தேதி சொல்ல முடியாது. எனக்கும் என் அண்ணன் தியாகராஜனுக்கும் இதே சொத்து சம்மந்தமாக அ.வ.எண்.12/2022, அ.வ.எண்.88/2018 மற்றும் இந்த வழக்கு என மொத்தம் 3 வழக்குகள் உள்ளது என்றால் ஆமாம். முதலில் நான் வழக்கு தாக்கல் செய்தேன். பின்பு அவர் தாக்கல் செய்தார். சார்பு நீதிமன்றத்தில் நான் ஒரு லட்சம் வாங்கிகொண்டதாக அ.வ.எண்.1/2022 நடந்து வருகிறது என்றால் ஆமாம்.

4. என் மனைவி 2015 லேயே இறந்துவிட்டார் என்றாலும் 2017 ல் சொத்தை அடமானம் வைத்து நான் மருத்துவ செலவு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 25.12.2018 ம் தேதியில் நான் பணம் கொடுத்ததாக அ.வ.எண்.1/2022 நடந்து வருகிறது என்றால் எனக்கு தேதி தெரியவில்லை. நான் தொலைந்து போன தேதியில் பணம் கொடுத்ததாக அ.வ.எண்.1/2022 ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தேதி தெரியவில்லை. ஆனால் என் அண்ணனிடம் பணம் கொடுத்துவிட்டேன். என் மனைவி இறந்த ஒரு மாதம் கழித்து தொலைந்துபோன நான் புகார் கொடுத்த ஒரு வாரத்தில்தான் திரும்பி வந்தேன் என்றால் ஆமாம். புகார் கொடுத்த பின்புதான் என்னை கண்டுபிடித்து கூட்டி வந்தார்கள்.

5. 2017 ல் தொலைந்த போகும் முன்பு என் மனைவி இறந்த 2015 ல் இருந்து 2018 வரையிலான இடைப்பட்ட காலத்தில் ஏதாவது நான் தியாகராஜனுக்கு கையெழுத்து செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. வங்கி கடனுக்காக ஜாமீன் கையெழுத்து மட்டும்தான் போட்டேன். தியாகராஜனுக்கு நான் சொத்து எதுவும்

விற்கவில்லை என்றால் என் மனைவி இருக்கும்போதே அவருக்கு 7 குழி (1 குழி என்பது 7 செண்ட் ஆகும்) விற்றுவிட்டேன். அது 2016ம் ஆண்டு என்றால் ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2018ல் அ.வ.எண்.88/2018ல் தன்னை தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்த போதுதான் அசல் ஆவணங்களை தேடியதாகவும் பிரதிவாதி நான் இல்லாத சமயத்தில் ஆவணங்களை எடுத்து சென்றதகாவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண் மக்கள். 3 பேருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆமாம். அவ்வாறு அசல் ஆவணம் தொலைந்து போனது தெரிய வந்ததும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் மகன்களிடம் கேட்டேன். கடனுக்கு ஜாமீன் கையெழுத்து பெறாமல் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும் என் மகன்கள் சொன்னார்கள். எனவே இந்த வழக்கை தாக்கல் செய்தேன். 20.08.2019ல்தான் தியாகராஜன் இடைமனு எண் தாக்கல் செய்துள்ளார் என்றால் தேதி தெரியாது. 20.08.2019க்கு பின்புதான் ஆவணம் வீட்டில் இல்லாத விவரம் தெரிய வந்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். அதன் பின்பு என் மகன்கள் சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்தேன்.

7. அதன் பின்பு சுமார் 8 மாதம் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதற்கு இடைப்பட்ட காலத்தில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் ஆமாம். 06.12.2018ல் இருந்து 2019 வரை கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருந்தது என்றால் ஆமாம். ஆண்ட்ரூஸ் கரும்பு சாகுபடி செய்தார். 2019 ஏப்ரல்–ஜூன் மாதத்தில் ஆண்ட்ரூஸ் கரும்பு சாகுபடி செய்தார் என்றால் செய்தார். வருடாவருடம் அவர் அறுவடை செய்து கொண்டுதான் வருகிறார். எனது பிரமாண வாக்குமூலத்தில் சார்பதிவாளரிடம் புகார் கொடுத்ததாக சொல்லியிருப்பதில் அந்த புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நான் அவரிடம் போகவேயில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சார்பதிவாளரிடம் புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அவரிடம் நேரடியாக போய் கேட்டேன். அவர் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு சொன்னார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)